**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவொற்றியூர்**

**OS.No. 42 / 2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு.சரவணன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஏப்ரல் 18-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 18.04.2024**

**பெயர் - முனுசாமி**

**த/பெ - துரைராஜ்**

**சாட்சி - DW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 11.15 A.M**

**குறுக்கு விசாரணை-**

2. நான் வழக்கில் எத்தனையாவது பிரதிவாதி என்றால் 3ம் பிரதிவாதி. வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என்னுடைய இடத்திற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளனர். வழக்கு சொத்து எதன் அடிப்படையில் என்னுடைய சொத்து என நான் கூறகிறேன் என்றால். எனது தந்தையார் காலத்தில் இருந்து அங்கே தான் நாங்கள் வசித்து வருகிறோம் நான் அங்கு தான் பிறந்து வளர்ந்தேன். எனது தாயாரின் பெற்றோர் பெயர் என்ன என்றால் முனுசாமி மற்றும் நாகவள்ளி ஆகும்.

3. எனது தந்தையாரின பெற்றோர் பெயர் என்ன என்றால் ரங்கசாமி மற்றும் காளியம்மாள் ஆகும். மேற்படி எனது தாத்தா ரங்கசாமிக்கு எத்தனை திருமணங்கள் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. பர்மாவில் இருந்து வந்ததாக நான் எனது பதிலுரையில் தெரிவித்துள்ளேன் என்றும் யார் யார் பர்மாவில் இருந்து வந்தது என்றால் எனது அப்பா கூறி தான் எனக்கு விவரங்கள் தெரியும். எனது அம்மா மற்றும் எனது அப்பா பர்மாவிலிருந்து வந்ததாக அவர் கூறினார். நான் பிறந்ததற்கு

பின் ரங்கசாமி என்னுடன் தான் வாழ்ந்தார் என்றால் சரிதான்.

4. எனது தாத்தா ரங்கசாமி எப்பொழுது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. எனது தாய் தந்தையரின் பெயர் என்ன என்றால் துரைராஜ் மற்றும் மாரியம்மாள் ஆகும். எனது பதிலுரையில் 1966வது வருடம் எனது தாய் தந்தையர் பர்மாவிலிருந்து வந்ததாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது தாய் தந்தையர் பர்மாவிலிருந்து வந்த அகதிகள் என்றால் சரிதான். பர்மாவிலிருந்து சென்னை வந்த பிறகு அவர்கள் எங்கே குடியிருந்தார்கள் என்றால் நேரடியாக வழக்கு சொத்தில் தான் வந்து குடியேறினார்கள்.

5. பர்மாவிலிருந்து வந்து குடியேறியவர்களுக்கு வழக்கு சொத்து எவ்வாறு உரிமையானது என்றால் அரசாங்கம் அகதிகளுக்கு அதை கொடுத்துவிட்டது. அரசாங்கம் கொடுத்த இடம் எண் 81/16, அன்னை சிவகாமி நகர் , 2வது தெரு, ராமசாமி நகர், கத்திவாக்கம், எண்ணூர் என்ற முகவரிதான் உடையதா என்றால் ஆமாம். எனது பதிலுரையில் அரசாங்கம் கொடுத்த இடத்திற்கு எனது தந்தையார் துரைராஜ் பெயரில் ஆவணம் கொடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் அவ்வாறு நான் தெரிவிக்கவில்லை.

6. அரசாங்கம் எனது தந்தையார் பெயரில் வழக்கு சொத்தை கொடுத்ததற்கு நான் என்ன ஆவணம் வைத்துள்ளேன் என்றால் ஆவணம் எதுவும் இல்லை. பர்மாவிலிருந்து வந்து குடியேறிய எத்தனை குடும்பங்கள் நான் வசிக்கும் இடமருகில் வசிக்கிறார்கள் என்றால் அங்கே மொத்தம் 10 தெருக்கள் உள்ளது. ஒவ்வொரு தெருவுக்கும் 84 குடும்பங்கள் உள்ளது. அங்கே 8000 ஓட்டு எண்ணிக்கை உள்ளது அனைவரும் பர்மா அகதிகளே. எத்தனை வருட காலமாக அங்கே பர்மா அகதிகள் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சுமார் 55 வருடகாலமாக வாழ்ந்து வருகிறார்கள். அங்கே வாழ்ந்து வருபவர்கள் அனைவரும் எனது அப்பா மற்றும் தாத்தா காலத்திலிருந்து வாழ்ந்து வருபவர்களா என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. சிலர் அங்கிருந்து விற்று விட்டு சென்றிருக்கலாம்.

7. எனது தந்தையார் துரைராஜ் மற்றும் எனது தாயார் மாரியம்மாளுக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் காளியம்மாள் மற்றும் நான் முனுசாமி ஆகிய இருவர் மட்டுமே. எனது தாயார் 22/09/2008 ல் இறந்து விட்டதாக எனது பதிலுரையில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

அதே போல் எனது தந்தையார் 18/06/2012ல் இறந்துவிட்டதாக எனது பதிலுரையில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். முதல் பிரதிவாதி காளியம்மாளுக்கும் ராஜி என்பவருக்கும் திருமணம் நடந்ததா என்றால் ஆமாம். எப்பொழுது திருமணம் நடந்தது என்றால் 1987 அல்லது 1988 ல் நடந்தது. எனது பதிலுரையில் 10/10/1990 ல் ராஜி இறந்து விட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் ஆமாம்.

8. மேற்படி ராஜியை கொலை செய்தனர். ராஜி மற்றும் முதல் பிரதிவாதி காளியம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 நபர்கள். யார் யார் என்றால் ராஜலட்சுமி மற்றும் விக்னேஷ் ஆகும். இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி இமயவரம்பன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது அக்கா மகன் ஆவார். முதல் பிரதிவாதி காளியம்மாளுக்கு 2ம் பிரதிவாதி என்ன உறவுமுறை என்றால் மகனாவார். 2ம் பிரதிவாதி இமயவரம்பனின் செல்ல பெயர் தான் விக்னேஷ் ஆகும். எனக்கு திருமணம் நடந்ததா என்றால் இல்லை.

**(மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது .)**

**விசாரணை முடியும் நேரம் : 11..40 A.M**